
ஆத்திசூடி
வள்ளுவம் வாய் விளக்கம்
உயிர்வருக்கம்
அறி
அமை
அடை
ஔவையார
அருளுரை
அறம் வழி வாழ்வியல்
நெறிகள்
குழந்தைகளுக்காக
பொசுமி

# ஆத்திசூடி

தமிழுக்கு அழகு கவிதை.
கவிதைக்கு அழகு செறிவு சுருக்கம்.
சுருக்கத்திற்கு அழகு இரு சொற்களில் பெருங்கவிதை.
ஆத்தி, சூடி இரு சொற்கள்.
இறைவன், இறை வணக்கம், வாழ்க்கை நெறிகள்,
உபதேசம் என நான்கு வகை பொருள்.
நால்வகைப் பொருளும் நான்கடி மடக்காய் தோன்றி
மும்முறை மடிந்து வந்து ஒற்றைத் தொடராய் நின்றது
– மும்மடித்தொடர்.

| | | |
|---|---|---|
| ஆத்தி+சூடி | – | ஆத்தி மலர்களைச் சூடிய இறைவன் |
| ஆதி+சூடி | – | முதலாவதாகப் பற்றிக் கொண்டு |
| ஆதி+சூள்+ஈ | – | முதன்மையான உறுதிச் சொற்கள் |
| ஆதி+சூழ்+இ | – | முதலாவதாகப் பின்பற்றி விடு. |



### குறிப்பு

1. ஆதி என்ற சொல் வலித்தல் விகாரம் பெற்று ஆத்தி என்றானது.
2. சூள்+ ஈ =சூடி ( ஈ முன்னிலை அசைச்சொல்லாய் தோன்றி புணர்ந்து குறுகியது)
3. சூழ்+இ =சூடி ( இ ஏவல் பொருளாய் தோன்றி புணர்ந்தது)


ஆத்தி மலர்களைச் சூடிய இறைவனை முதலாவதாக பற்றிக் கொண்டு உலகின் முதன்மையான வாழ்க்கை நெறிகள் என்பனவற்றை முதல் காரியமாக பின்பற்றி விடு

-ஆத்திசூடி (மும்மடித்தொடர்)

இது தமிழ் மொழிக்கு அழகா? ஔவை மொழிக்கு அழகா?

# அறஞ்செய விரும்பு

## (அறம் செய விரும்பு)




இயற்கை நமக்கு அளித்த கொடை உடல். உடலை இயக்குவது உயிர். ஆறறிவு உயிர்களுக்கு சிறப்புடன் அமைந்தது மனம். அந்த மனத்தை தூய்மைப்படுத்தலே அறம். மனம் தூய்மை அடைந்து, அன்பு கருணை கொண்டு, ஈகை போன்ற நற்செயல்களை செய்யும்போது புகழ் அடைந்து விட முடியும். எனவே மனதை தூய்மைப்படுத்த, செய்ய வேண்டியவற்றை செய்ய விரும்பு என்பதே.

மனத்தை தூய்மைப்படுத்தலே அறம் என்கிறார் ஐயன் திருவள்ளுவர். மனத்தை எந்த அளவுக்கு குற்றமற்றதாய் ஆக்குவீர்களோ அந்த அளவுக்கு அறம் வளரும் என்கிறார். மற்றவரோடு பொறாமைப்படுதல், அளவற்ற ஆசை, அடக்க முடியாத கோபம், கடுமையான வார்த்தைகள், இவற்றை தவிர்க்க தொடங்கும் போதே நீங்கள் அறத்தின் பாதையை தேர்ந்தெடுத்து விட்டீர்கள் என்கிறார். தீவினைகளைத்தவிர்த்து, அன்பு, கருணை கொண்டு, தன்னலம் இன்றி நற்செயல்களை செய்து செல்வமும் புகழும் அடைந்து விடுங்கள் என்கிறார். அதுவே இன்பம் தருவதும் செய்ய வேண்டியதும் ஆகும் என்கிறார். பிறவித்துன்பத்தை தடுப்பதும் ஆகும் என்று கூறுகிறார். பழி வராமலும் காக்கும் என்கிறார். எனவே அறத்தினை பின்னர் செய்து கொள்ளலாம் என்றிராமல் முழு மனத்தோடு எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் முடிந்தவரைக்கும் எங்கே சென்றாலும் செய்து கொண்டே இருங்கள் என்கிறார்.

இவ்விதம் மனத்தை தூய்மைப்படுத்தி புகழடைந்து விடு என தெரிவிக்கவே அறம் செய்ய விரும்பு என்றார் நம் ஔவைப்பாட்டி.




# அறஞ்செய விரும்பு

## (அறம் செய விரும்பு)

மனத்தை தூய்மைப்படுத்தலே அறம், மனத்தை தூய்மைப்படுத்த நினை.

### அம்மா

(தாய்)



### அன்பு

(கருணை)



### அரவணை

(பாதுகாப்பு செய் )

